## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 313/2023 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | குமார் |
| Father Name | : | ஆறுமுகம் |
| Village | : | ஊதியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 40 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ஊதியூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2023 ஆம் தேதி ஊதியூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலராக பணியில் இருந்தபோது செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப ஊதியூர் காவல் நிலைய குற்ற எண்.147/2023 சட்டப்பிரிவு 294(b), 323, 506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.மாடசௌந்திரபாண்டி அவர்கள் பார்வைக்கு வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

புகார் கொடுத்தவர் எதிரியின் மனைவி என்றால் சரிதான். சம்பவமானது 28.11.2023 ஆம் தேதி மதியம் 1.00 மணிக்கு நடந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் ஒரு நாள் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த பொய்யான

புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.20 17:32:11 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 313/2023 |
| Deposition of Witness | : | PW– 5 |
| Name | : | ராஜா |
| Father Name | : | செல்வராஜ் |
| Village | : | ஊதியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 39 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.02.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஊதியூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மாடசௌந்திரபாண்டியன் அவர்கள் பணிமாறுதலில் வேறு காவல் நிலையம் சென்றுவிட்டதாலும், மேலும் வழக்கில் தொடர் புலன் விசாரணை மேற்கொண்ட திரு. தேவராஜ் அவர்கள் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் தற்போது ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 29.11.2023 ஆம் தேதி ஊதியூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக்காவலர் திரு. குமார் அவர்கள் பணியில் இருந்தபோது செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப ஊதியூர் காவல் நிலைய குற்ற எண்.147/2023 சட்டப்பிரிவு 294(b), 323, 506(2) இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு.மாடசௌந்திரபாண்டி அவர்கள் பார்வைக்கு வைத்தார்.

3. பின்னர் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் திரு.மாடசௌந்திரபாண்டியன் அவர்கள் தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 29.11.2023 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் திவாகர் மற்றும் மனோகரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு இவ்வழக்கின் சுமார் 45 செமீ நீளமுள்ள மரக்கைப்புடியுடன் கூடிய இரும்பு அரிவாள் ஒன்று கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் சாட்சிகள் செல்வி, வேலுச்சாமி, மகேஷ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் பின்னர் வழக்கின் எதிரியான வலுப்பூரான் என்பவரை 29.11.2023 ஆம் தேதியன்று காலை 11.00 மணியளவில் கவுண்டம்பாளையம் வாய்க்கால் பாலம் அருகில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் தொடர் புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திரு. தேவராஜ் அவர்கள் பார்வைக்கு வைத்தார்.

5. பின்னர் இவ்வழக்கினை உதவி ஆய்வாளர் திரு.தேவராஜ் அவர்கள் தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு **இவ்வழகின் சட்டப்பிரிவினை** 294(b), 323, 506(2) இதச வில் இருந்து 294(b), 323, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6. பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு முதல் நிலைக்காவலர் திரு குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகாரானது ஒரு நாள் காலதாதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரில் அரிவாளை எதிரி எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரிதான். அரிவாளை கைப்பற்றியபோது புகைப்படம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மகஜர் சாட்சிகள் இருவரும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல. வழக்கின் புகார்தாரர் செல்வியைத்தவிர மற்ற நேரடி சாட்சிகள் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சிகள் யாரும் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்து வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.20 17:32:19 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்